மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் நெருங்கிய பழக்கம் உள்ளவர் என்று சொன்னது நீங்கள் எல்லோருடனும் நல்ல முறையில் பழகுகிறவர்என்கிற அர்த்தத்திலே சொன்னேன். ஏதோ உங்களுக்கு அவர்களோடு தொடர்பு இருக்கிறது என்பதைப்போல நான் சொல்லவில்லை. நான் சொன்ன வார்த்தை கூட எல்லோருடனும் பழகுகிற வாய்ப்பை உடையவர் என்பதாக மாற்றிக்கொள்ளப்படுகிறது.

2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) ஆலயத் திருப்பணி நிதிக்கு சில உறுப்பினர்கள் தங்கள் ஓராண்டுச் சம்பளம் வழங்கியுள்ளது குறித்து.

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோவில் பராமரிப்பு நிதிக்காக தன்னுடைய ஓராண்டு சம்பளத்தைக் கொடுத்ததைத் தொடர்ந்து இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கா. ப. பட்டாபிராமன் தன்னுடைய ஓராண்டு ஊதியமாக ரூ.30,000-த்தையும் திரு. சி. இராமசுவாமி அவர்கள் ரூ. 15,000-த்தையும், டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ரூ. 6,250-ஐயும், திரு. க. அர்ச்சுனன் அவர்கள் ரூ. 6,250-க்குமான காசோலைகளை முதலமைச்சர் அவர்களுக்குத் தரவேண்டுமென்று என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். அது முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலைகளைக் கொடுத்த அனைவருக்கும் என்னுடைய உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பட்டியல் நீண்டுக்கொண்டே போக வேண்டும் என்ற என் விருப்பத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் நீங்கள் கொடுத்த பிறகு அறிவிக்கப்படும். (குறுக்கீடு) அன்றைக்கு கொடுத்தது வேறு. இது இன்றைக்கு கொடுத்தது. அன்று நீங்கள் கொடுத்தவுடனே அறிவித்தாகிவிட்டது.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. ம. தனபால் அவர்கள் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு

(குறுக்கீடுகள்) வேறு ஒன்றும் அல்ல. அங்கிருந்த ஒரு பெயர்ப் பலகை மேலேயிருந்து மதுவிலக்குத் துறை ஆணையர் அவர்கள் மீது விழுந்தது.

பேரவையைப் பராமரிக்கின்ற பொதுப்பணித்துறை ஊழியர்களை ஆங்காங்கே சுவர்களிலே மாட்டப்பட்டிருக்கின்ற படங்களுக்கு கீழே இருக்கின்ற பலகைகள் முதலியவை சரியாக இருக்கிறதா என்பதைப் பேரவை முடிந்த பின்னர் சரிபார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் ஒன்றும் ஆகாது. தினசரி சரிபார்க்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், புதுப்பாக்கம் கிராமம் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் தொழிற்சாலைக் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகுப் பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்விளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம் புதுப்பாக்கம் கிராமத்தில் உள்ள ஒயிட் ஹவுஸ் பிரசாஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த ” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் செங்கல்பட்டு தாலுக்கா புதுப்பாக்கம் கிராமத்தில் ச. எண். 43/4-ல் திருவாளர்கள் ஒயிட் ஹவுஸ் பிராசஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழிற்சாலை அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1991 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்கு சுமார் 2.5 டன் நெய்த உள்ளாடை துணிகள் வெளுக்கப்பட்டு சாயம் ஏற்றும் பணிகள் நடைபெற்று